செ.வெ.எண்:47 நாள்: 28.09.2020

# கோயம்புத்தூர் மாவட்டம்

## தனியார் ஆய்வகங்களில் மேற்கொள்ளப்படும் கொரோனா வைரஸ் தொற்று பாரிசோதனை விவரங்களை உடனடியாக தெரிவிக்க வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் அறிவுரை.

---

கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று(28.09.2020) கொரோனா வைரஸ் பரிசோதனைகள் மேற்கொள்ளும் தனியார் ஆய்வக பிரதிநிதிகள் மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இராமதுரைமுருகன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.கிருஷ்ணா, தனியார் கொரோனா தொற்று பரிசோதனை மையங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,**

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்று கட்டுப்படுத்துதல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கொரோனா வைரஸ் தொற்று அதிகமுள்ள பகுதிகளில் காய்ச்சல் முகாம்கள் நடத்தப்படுவதுடன், அறிகுறி உள்ளவர்களை கண்டறிந்து அவர்களுக்கு பரிசோதனை செய்யப்படுகிறது. தொற்று உள்ளவர்கள் கண்டறியப்பட்டவுடன், அவர்கள் நோய் தொற்றின் அறிகுறிகளின் அடிப்படையில் கோவை அரசு மருத்துவமனை, இ.எஸ்.ஐ மருத்துவமனை மற்றும் கொரோனா தொற்று சிகிச்சை மையம் என தன்மைக்கேற்றவாறு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்படுகிறார்கள்.

கொரோனா தொற்று பரிசோதனையை மேற்கொள்ளும் தனியார் ஆய்வகங்கள் தங்களின் ஆய்வகங்களில் பரிசோதிக்கப்படும் மாதிரிகளின் முடிவுகளை தாமதமின்றி வெளியிட வேண்டும். அவற்றில் குறிப்பாக கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டால் அவர்கள் மருத்துவமனைக்கு செல்வதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும் எனவும், உடனடியாக அவர்களின் தொடர்பு

விவரத்தினை சுகாதாரத்துறை மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு தெரிவிக்க வேண்டும்.

அனைத்து தனியார் ஆய்வகங்களிலும் பல்ஸ் - ஆக்சி மீட்டர் மூலம் அவர்களை அவசியம் பரிசோதனை செய்துகொள்வதுடன், அதில் அறிகுறி உள்ளவர்களை சோதனை முடிவு வரும் முன்னரே மருத்துவமனைக்கு அனுப்பிட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றினை குறைத்திடும் நோக்கில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சி எடுத்தும் வரும் நடவடிக்கைக்கு தனியார் பரிசோதனை மையங்கள் மிகுந்த ஒத்துழைப்பு தரவும், அரசு நிர்ணயித்த கட்டணம் மட்டுமே வசூலிக்க வேண்டும்.

கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்தும் பணியில் இன்றியமையாதது, புதியத் தொற்றுக்களை உடனடியாக கண்டறிதல் ஆகும். இதனை கருத்தில் கொண்டு, கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனைகள் அதிகஅளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று குறைவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு அளித்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.இராசாமணி இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கோயம்புத்தூர்.**